**தலைப்பு - 429 கிராமிய வயல் நிலங்கள் மற்றும் அண்டியுள்ள குளங்கள், நீர்த் தேக்கங்கள் மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கிராமிய வயல் நிலங்கள் மற்றும் அண்டியுள்ள குளங்கள், நீர்த் தேக்கங்கள் மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 ஆந்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் கிராமிய வயல் நிலங்கள் மற்றும் அண்டியுள்ள குளங்கள், நீர்த் தேக்கங்கள் மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 மே 21 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 யூலை 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிராமிய வயல் நிலங்கள் மற்றும் அண்டியுள்ள குளங்கள், நீர்த் தேக்கங்கள் மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும்

வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(ஈ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியொகத்தரும் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) உப பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

- இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2187/27 ஆம் இலக்க 2020 ஆகஸ்ட் மாதம் 09 ஆந் திகதி வெளியிடப்பட்ட அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் கிராமிய வயல் நிலங்கள் மற்றும் அண்டியுள்ள குளங்கள், நீர்த் தேக்கங்கள் மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு ஸ்தாபிக்கப்பட்டதனால் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களொன்று இருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி நிலைமைக் கூற்று

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,022,573 ஆன தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள், இயந்திரங்கள் பற்றிய விபரங்கள் நிதியல்லாச் சொத்துக்கள் பற்றிய கூற்றில் உள்ளடக்கப்படவில்லை. | கிராமிய வயல் நிலங்கள் மற்றும் அண்டியுள்ள குளங்கள், நீர்த் தேக்கங்கள் மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி இராஜாங்க அமைச்சிற்காக 2020 ஆம் அண்டில் CIGAS செயற்திட்டத்தின் கீழ் மூலதனச் சொத்துக்கள் ஒதுக்கக் கணக்கு ஒன்று (Capital Asset Reserved) செயற்படுத்தப்படாமையால் 2020 திறைசேரி அச்சீட்டு குறிப்புக்களில் அக்கணக்கின் மிகுதியொன்று காட்டப் பட்டிருக்கவில்லை. அதன் காரணத்தால் 2020 ஆம் | நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரியான தகவல்கள் உள்ளடக்கப் படுவதை உறுதிப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | நிதிக்கூற்றில் 2020 ஆம் வருடத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள், இயந்திரங்களின் பெறுமதி நிதியல்லாச் சொத்துக்கள் பற்றிய கூற்றில் உள்ளடக்கப்படவில்லை. 2021 பெப்ரவரி மாத மூலதனச் சொத்துக்கள் ஒதுக்கக் கணக்கு செயற்படுத்தப்பட்டு உரிய சொத்துக்கள் CIGAS செயற்திட்டத்தின் கீழ் கணக்கிடப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. | |

### 1.6.2 காசுப்பாய்ச்சல் கூற்று

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிதிச் செயலாற்றல் கூற்றின் பிரகாரம் ஏனைய பெறுவனவுகள் ரூபா 191,184 என்பதுடன் காசுப் பாய்ச்சல் கூற்றில் ரூபா 429,333 ஆகக் காட்டப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்றில் ரூபா 238,149 அதிகமாகக் காட்டப்பட்டிருந்தது. | 2020 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்றில் வருமானமற்ற பெறுவனவுகள் வகைப்படுத்தப்பட்டதன் பிரகாரம் ஏனைய பெறுவனவுகளாக வருமானத் தலைப்பின் கீழ் பெறுவனவுகளின் கூட்டுத் தொகை குறிப்பிடப்பட்டுள்ளது (ரூபா 191,184) செலவுத் தலைப்புக்களில் மேற்கொள்ளப்படுகின்ற நிதிச் செயலாற்றல் கூற்றின் செலவுகள் குறிப்பிடப்பட்டிருந்தமையில் தரவுச் செயலாற்றல் கூற்றில் வருமானமல்லாத பெறுவனவுகளில் மிகைக் கட்டணப் பெறுவனவுகள் நீக்கப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றேன். ஆனால் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது அமைச்சின் ஒன்றிணைந்த பரீட்சை நிலுவையின் | பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | மிகுதியினை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடல் செய்யப்பட்டமையால் வருமானமல்லாத பெறுவனவுகளாக அனைத்து செலவுகளின் கூட்டுத்தொகை உள்ளடக்கப்பட்டுள்ளது. | |

**1.6.3 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

அமைச்சினால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள சில பதிவேடுகள் பேணப்படாததுடன் சில பதிவேடுகள் முறையாக மற்றும் நாளதுவரையாக்கப்பட்டு பேணப்படாமை மாதிரிக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிலையான சொத்துப் பதிவேடு | | |
| 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை / நிதிப் பிரமாணம் 502(2) பிரகாரம் அதன் 11 ஆவது அத்தியாயத்தின் பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேட்டில் பேணப்படவில்லை. | இராஜாங்க அமைச்சின் நிறுவன மற்றும் நிதி நடவடிக்கைகளை ஊழியர்களின் பற்றாக்குறை காரணமாக 2020 ஆம் ஆண்டில் முறையாக ஸ்தாபிக்கப்படாமையால் சில பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமையை தெரிவிக்கின்றேன். ஆனால் 2021 இலிருந்து பதிவேடுகள் பேணப்படும். | நிலையான சொத்துப் பதிவேடு சுற்றறிக்கைப் பிரகாரம் பேணப்படல் வேண்டும். |
| (ஆ) பொருட்கள் பதிவேட்டுப் புத்தகம் | | |
| நிதிப்பிரமாணம் 454(1) இன் பிரகாரம் பொருட்கள் பதிவேட்டுப் புத்தகமொன்று பேணப்படவில்லை. (Inventory Book) | - மேற்படி - | நிதிப்பிரமாணம் 454(1) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் 44 ஆவது பொது மாதிரிப் படிவத்தின் படி பொருட்கள் பதிவேட்டுப் புத்தகமொன்று நாளதுவரையாக் கப்பட்டு பேணப்படல் வேண்டும். |

(இ) பிணைப் பதிவேடு

| | | |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணை வைக்கப்பட வேண்டிய அதிகாரிகள் மற்றும் ஊழியர்களின் தகவல்கள் அடங்கியதாக பிணைப் பதிவேடொன்று தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | நிதிப்பிரமாணம் 891(1) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகவல் உள்ளடங்கியதாக பிணை வைக்கப்பட வேண்டிய அதிகாரிகள் தொடர்பாக பிணைப் பதிவேடொன்று பேணப்படல் வேண்டும். |

(ஈ) பொறுப்புக்கள் பதிவேடு

| | | |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்கள் பதிவேடொன்று பேணப்படவில்லை. | - மேற்படி - | நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்கள் சரியாக்குவதற்கு முடியுமான வகையில் பொறுப்புக்கள் பதிவேட்டில் அப்பொறுப்புக்கள் பதியப்படல் வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

## 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் இராஜாங்க அமைச்சினால் நிறைவேற்றப்படுவதற்கு திட்டமிடப்பட்ட பணிகளுக்காக ரூபா 27,605,000 ஆன கட்டு நிதியொன்று கோரப்பட்டிருந்த போதிலும் பொது திறைசேரி ரூபா 10,400,000 வழங்கியிருந்தது. அதன் பிரகாரம் கோரப்பட்ட கட்டு | 2020 ஆகஸ்ட் மாதம் 09 ஆந் திகதி 2187/27 ஆம் வெளியீட்டு இலக்க அதி விசேட வர்த்தமானிப் பத்திரத்தின் பிரகாரம் கிராமிய வயல் நிலங்கள் மற்றும் அண்டியுள்ள குளங்கள், நீர்த் தேக்கங்கள் மற்றும் நீர்ப்பாசன | பாதீட்டுக் கட்டுப்பாட்டு முரண்களைக் குறைக்கும் விதத்தில் எதிர்வு கூறல் செய்யப்படல் வேண்டும். |

| | |
|---|---|
| நிதியில் நூற்றுக்கு 62 வீதம் வழங்கப்பட்டிருக்கவில்லை | அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு நிறுவப்பட்டதன் பின்னர் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த மதிப்பீட்டின் அடிப்படையில் கட்டுநிதி திட்டமிடப்பட்டது. புதிய அமைச்சின் நடவடிக்கைகள் நிறுவப்படும் போது காணப்பட்ட பௌதீக வளங்களின் குறைபாடு மற்றும் பதவியணியினரின் பற்றாக்குறை போன்ற காரணங்களினால் எதிர்பார்க்கப்பட்டதன் பிரகாரம் செலவுகள் மேற்கொள்ளப்படாத காரணத்தினால் மாதாந்த கட்டுநிதி விண்ணப்பங்கள் மூலம் திறைசேரியிடம் கோரப்பட்டுப் பெறப்பட்ட தொகை ரூபா 10,400,000 என்பதை ஏற்றுக் கொள்ளுகின்றேன். |

## 2.2 செலவு முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 05 செலவு விடயங்களுக்காகத் திட்டமிடப்பட்ட மொத்த தேறிய ஒதுக்கங்கள் ரூபா 3,675,000 ஆனது பயன்படுத்தப்படாது முற்றாகச் சேமிக்கப்பட்டிருந்தது. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி பற்றாக்குறை காணப்பட்டால் அமைச்சின் நிறுவன நடவடிக்கைகள் பிரிவுகளாக மேற்கொள்ளப்படுவதற்கு 2020 திசெம்பர் மாதம் வரையில் முறையாகச் செயற்படுத்துவதற்கு சாத்தியமற்றதாக இருந்ததால் அத்தியாவசியக் கொடுப்பனவுகள் நீர்ப்பாசன அமைச்சின் மூலம் மேற்கொள்ளப்பட்டது. 2020 திசெம்பர் மாதத்திலிருந்து கணக்காளர் ஒருவர் நியமிக்கப்பட்டார். வரையறுக்கப்பட்ட பணியாளர்களுடன் நிதிப் பிரிவு நிறுவப்பட்டது. நிறுவன | பாதீடு தயாரிக்கும் போது இயன்றளவு முரண்கள் குறைக்கும் வகையில் செய்யப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | | நடவடிக்கைகளும் முறையாக கட்டியெழுப்பப்பட்டதும் 2021 சனவரி மாதத்தில் நிரந்தரமாக மேலதிகச் செயலாளர் வருகை தந்த பின்னரே ஆகும். இவ்வாறானதொரு நிலையில் 2020 வரவு செலவுத் திட்டத்தை திட்டமிட்டவாறு பயன்படுத்துவதற்குத் தேவையான படிமுறைகளை எடுப்பதற்கு தவறியிருந்தமையில் சில செலவுத் தலைப்புக்களின் ஒதுக்கங்களின் பயன்பாடு முற்றாச் சேமிக்கப்பட்டிருந்த துடன் சில செலவுத் தலைப்புக்களின் ஒதுக்கங்களின் சேமிப்பு 20-97 வரையான வீச்சில் இருந்தமையை ஏற்றுக் கொள்ளுகின்றேன். மேலும் அதிகாரிகளின் பற்றாக்குறை மற்றும் 2020 வருடத்தில் அபிவிருத்தி செயற்திட்டமொன்று செயற்படுத்தப்படாமை காரணத்தினால் களக் கடமைகள் மட்டுப்படுத்தப்பட்டமையால் பிரயாணச் செலவுகள் எதிர்பார்த்தவாறு செலவிடப்பட்டிருக்கவில்லை. | |
| (ஆ) | மதிப்பீடு தயாரித்தலின் போது தேவைகள் இனங்காணப்படாது ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்படல் மற்றும் திட்டமிட்டதன் படி வேலை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமையால் போன்ற காரணங்களால் 11 செலவு விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்தம் ரூபா 109,900,000 ஆன தேறிய ஒதுக்கங்களில் மொத்தம் ரூபா 36,728,183 அதாவது நூற்றுக்கு 33 வீதம் சேமிக்கப்பட்டிருந்தது. | 2020 ஆகஸ்ட் 09 ஆந் திகதி கிராமிய வயல் நிலங்கள் மற்றும் அண்டியுள்ள குளங்கள், நீர்த் தேக்கங்கள் மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு நிறுவப்பட்டது. அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் காணப்படுகின்ற பற்றாக்குறை காரணமாக அமைச்சின் நிறுவக நடவடிக்கைகள் பிரிவு ரீதியாக ஏற்படுத்துவதற்கு முடியவில்லை. அதனால் செலவுத் தலைப்புக்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகையில் | பாதீடு தயாரிக்கும் போது இயன்றளவு முரண்கள் குறைக்கும் வகையில் செய்யப்பட வேண்டியமை. |

| | | |
|---|---|---|
| ஒவ்வொரு செலவு விடயங்களின் கீழ் சேமிப்பு நூற்றுக்கு 20 வீதம் நூற்றுக்கு 97 வீதத்திற்கிடையிலான வீச்சைக் கொண்டிருந்தது. | சேமிப்புக்கள் ஏற்பட்டன. மேலும் ஊழியர்கள் பற்றாக்குறை மற்றும் 2020 ஆம் ஆண்டில் அபிவிருத்தி செயற்திட்டமொன்று செயற்படுத்தப்படாமையால் களக் கடமைகள் மட்டுப்படுத்தப்பட்டமையால் பிரயாணச் செலவுகள் எதிர்பார்த்தவாறு மேற்கொள்ளப்படவில்லை. | |

## 2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளில் ஈடுபடல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களுடன் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய கூற்றில் மீளாய்வாண்டிற்கான பொறுப்புக்கள் ரூபா 4,832,702 ஆகக் காட்டப்பட்டிருந்தது. 2021 சனவரியிலிருந்து மார்ச் 31 வரையான காலப்பகுதியில் 2020 ஆம் வருடத்திற்கான ரூபா 5,136,845 ஆன பொறுப்புக்கள் தீர்க்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் பொறுப்புக்கள் ரூபா 304,143 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | 2020 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்ட திகதி வரையில் 2021/02/28 திகதியில் இனங்காணப்பட்ட அனைத்து பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளதுடன் பெறுமதி ரூபா 4,832,702 ஆகும். அதன் பின்னர் கண்டுபிடிக்கப்பட்ட அத்தியாவசியமாகக் கொடுக்கப்பட வேண்டிய அமைச்சின் ஊழியர்களுக்கான மேலதிக மற்றும் பிரயாணச் செலவுகள் கொடுப்பனவு மற்றும் தொலைபேசி பற்றுச்சீட்டுக்களுக்கான கொடுப்பனவுகள் ஆகியவை 2021 சனவரி - மார்ச் 31 வரையில் தீர்க்கப்பட்டிருந்தன. அமைச்சின் நிறுவக நடவடிக்கைகள் மற்றும் நிதி நடவடிக்கைகள் முறையாக 2020 ஆம் ஆண்டில் ஒழுங்கமைக்கப் படாமையால் கௌரவ அமைச்சர் பதவியணி மற்றும் அமைச்சின் பதவியணியினரின் | அனைத்து பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் இனங்காணப்பட்டு கணக்கில் எடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கப்பட வேண்டும். |

கணக்குகள் தீர்க்கப்பட்ட போது அனைத்து உறுதிச்சீட்டுக்களையும் சமர்ப்பிக்கப்படாமையினால் இவ்வாறான அறிக்கையிடல் வழுக்கள் ஏற்பட்டிருந்தன என்பதை மேலும் தெரிவித்துக் கொள்கின்றேன். எதிர்காலத்தில் இவ்வாறான வழுக்கள் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடான இணக்கமின்மைகள்

மாதிரிக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| அவதானிப்பு | | | |
|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு** | **இணக்கமின்மைகள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **பரிந்துரை** |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (அ) நிதிப்பிரமாணம் 756 | பொருட் கணக்கெடுப்பு அறிக்கை சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நீர்ப்பாசன அமைச்சு மற்றும் கிராமிய வயல் நிலங்கள் மற்றும் அண்டியுள்ள குளங்கள், நீர்த் தேக்கங்கள் மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு ஜாவத்தைப் பகுதியில் ஒரே இடத்தில் நிறுவப்பட்டு இயங்கி வருவதால் இராஜாங்க அமைச்சின் புதிய பிரிவு நிறுவப்பட்ட போது நீர்ப்பாசன அமைச்சின் இன்வென்ரிக்கு உரித்தான பண்டங்கள் பரிமாறப்பட்டன. அதனால் 2020 ஆம் ஆண்டில் இராஜாங்க அமைச்சிற்காக வெவ்வேறாக பொருட் கணிப்பீடு செய்யப்படுவதற்கு முடியாதிருந்ததுடன் ஜாவத்தை பகுதியில் காணப்பட்ட அனைத்து | நி.பி 756 இன் பிரகாரம் பொருட் கணிப்பீட்டு அறிக்கை சமர்ப்பிக்கப் படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | பொருட்களுக்காகவும் நீர்ப்பாசன அமைச்சின் கீழ் பொருட் கணிப்பீடொன்று செய்யப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 2021 ஆம் ஆண்டில் அமைச்சின் புத்தகங்களில் உள்ளடக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 103(1)(அ) | திடீர் விபத்துக்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களால் பொறுப்பானவர்களுக்கு அறிக்கையிடப்பட வேண்டிய போதிலும் விபத்து ஏற்பட்ட ஒரு வாகனம் தொடர்பாக அவ்வாறு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இராஜாங்க அமைச்சுக்கு வழங்கப்பட்டிருந்த வாகனமொன்று என்பதுடன் இராஜாங்க அமைச்சரின் தனிப்பட்ட பதவியணியினருடன் இணைக்கப்பட்டிருந்த சாரதி ஒருவரால் இவ்வாகனம் விபத்தில் மாட்டிக் கொண்ட சந்தர்ப்பத்தில் ஓட்டப்பட்டது. அரச சொத்துக்களின் பயன்பாடு பற்றிய புரிந்துணர்வு இல்லாத காரணத்தினால் நிதிப்பிரமாணம் 103 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாததுடன் எதிர்காலத்தில் இவ்வாறான சந்தர்ப்பங்கள் ஏற்படுமிடத்து மேற்கொள்ளப்பட வேண்டிய முறைகள் குறித்து அனைத்து சாரதிகளுக்கும் தெரிவிக்கப்பட்டது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ பலவீனங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சு 2020 ஆம் ஆண்டில் எவ்வித அபிவிருத்தி செயற்திட்டமொன்றை | 2020 வருடாந்த மதிப்பீட்டில் சிறிசர சிவிசும் திருகோணமலை மாவட்ட | கணக்கீட்டு உத்தியோகத்தர் களுக்கிடையே |

செயற்படுத்தவில்லை. செலவுத் தலைப்பு 2509 இன் கீழ் சிறிசர பிவிசும செயற்திட்டத்திற்காக ரூபா 79.65 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. சனாதிபதிச் செயலகத்தின் செலவுத் தலைப்பின் கீழ் செயற்படுத்தப்பட்டிருந்த மேற்படி செயற்திட்டத்தின் 2019 ஆம் ஆண்டின் பொறுப்புக்களுக்காக ரூபா 60,809,765 ஆன ஒதுக்கங்கள் திருகோணமலை மாவட்டச் செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பான விபரங்கள் பெறப்பட்டிருக்கவில்லை. அதன் கீழ் வருடத்தில் ரூபா 59,933,248 ஆன செலவுகள் செலவிடப்பட்டிருந்தது. நிதிப் பிரமாணம் 146 இன் பிரகாரம் அச்செலவு எப்பணிகளுக்காகச் செய்யப்பட்டதென்பது, அதன் ஒவ்வொரு செயற்பாடுகளினதும் முன்னேற்றம், முடிக்கப்படாது நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைகளின் பகுதி மற்றும் அதற்காக மேலும் செலுத்த வேண்டிய செலவுகள் தொடர்பான விசாரணையொன்று நடைபெறவில்லை.

அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் 2019 ஆம் ஆண்டில் பொறுப்புக்களைத் தீர்ப்பதற்காக செலவுத் தலைப்பு இலக்கம் 2509 இன் கீழ் ரூபா 79.65 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. இச்செயற்திட்டம் இன்று வரையில் நிர்மாண நடவடிக்கைகள் முடிக்கப்பட்டு கொடுப்பனவுகள் தீர்த்தல் மட்டுமே நடைபெற்றன. கையிருப்பில் உள்ள பற்றுச்சீட்டுக்கள் விரைவாகத் தீர்க்கப்பட வேண்டுமெனவும் 2020 ஆம் ஆண்டிற்கான செலவுத் தலைப்புக்கள் பலவற்றில் மேற்கொள்ளப்பட்ட செலவுகள் சரியாக 2020 ஆம் ஆண்டிற்கான கணக்குகளைத் தீர்ப்பதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் சனாதிபதி செயலகம் மற்றும் வரைவு செலவு திட்டத் திணைக்களத்தின் மூலம் அறிவுறுத்தப்பட்டிருந்தது. எனவே திருகோணமலை மாவட்டச் செயலாளரின் மற்றும் சனாதிபதி செயலகத்தின் பிரதான நிதி உத்தியோகத்தரின் கோரிக்கையின் படி ஒதுக்கங்கள் விரைவில் வழங்கப்படுவதற்கு ஏற்பட்டன. மேலும் இத்திட்டம் திருகோணமலை மாவட்டச் செயலாளரின் மேற்பார்வையின் கீழ் செயற்படுத்தப்பட்டிருந்தது. திருகோணமலை மாவட்டச் செயலகத்தின் மூலம் பெறப்பட்ட பொறுப்புக்கள் தொடர்பான விபரங்கள் சமர்ப்பிக்கப்படுகின்றன.

செய்யப்படும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் மூலம் விதிக்கப்பட்டுள்ள விதிகளுக்கு இணங்குவதை உறுதி செய்வதற்காக அதற்கான உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகள் மீண்டும் மீளாய்வு செய்யப்பட்டு தேவையான கட்டுப்பாடுகள் அறிமுகப்படுத்தப் படல் வேண்டும்.

## 3.2 வெளித்தரப்பினருக்குச் சொந்தமான சொத்துக்களின் பாவனை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி வரையில் இராஜாங்க அமைச்சினால் வெளித்தரப்பினருக்குச் சொந்தமான ரூபா 137,900,000 கிரயமான 13 மோட்டார் வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு வருவதுடன் அவற்றை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | அமைச்சிற்குச் சொந்தமானவற்றை கையேற்கும் நடவடிக்கைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதுடன் 2021 ஆம் வருடத்தில் கணக்கில் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வெளித் தரப்பினருக்குச் சொந்தமான சொத்துக்களை கையேற்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டில் அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 70 என்பதுடன் உள்ளபடியான பதவியணி 31 ஆகும். அதன் பிரகாரம் வெற்றிடங்களின் எண்ணிக்கை 39 ஆகும். | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் இந்த அமைச்சிறகாக 70 அதிகாரிகளைக் கொண்ட பதவியணியொன்றை அங்கீகரித்துள்ளது. அங்கீகரிக்கப்பட்ட பதவியணி தொடர்பாக அரச சேவைகள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தும் வருட இறுதி வரையில் அதிகாரிகள் இணைக்கப்படவில்லை. நீர்ப்பாசன அமைச்சின் அதிகாரிகள் பதில் அடிப்படையில் நியமிக்கப்பட்டள்ளனர். காணப்படுகின்ற வெற்றிடங்களை நிரப்புமாறு அரச சேவைகள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சிடம் பல தடவைகள் கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன. பணியில் அமர்த்தப்பட்ட மொத்த அதிகாரிகளின் எண்ணிக்கை | பதவிகளுக்கான தேவைப்பாடு மீளாய்வு செய்யப்பட்டு தேவையின் பதவியணியின் வெற்றிடங்கள் நிரப்பப்படுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | 31 மற்றும் வெற்றிடங்கள் 39 ஆகவும் காணப்பட்டன. | |
| (ஆ) | சிரேஷ்ட மட்டத்தில் 13 பதவிகள், மூன்றாம் மட்டத்தில் 02 பதவிகள், இரண்டாம் மட்டத்தில் 14 பதவிகள் மற்றும் ஆரம்ப மட்டத்தில் 09 பதவிகளுக்கான வெற்றிடங்கள் காணப்படுவதுடன் அப்பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. | பதவி வெற்றிடங்கள் தொடர்பாக கிராம சேவைகள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, பல்நோக்கு அபிவிருத்தி செயலாற்றல் செயலணித் திணைக்களம் மற்றும் விவசாய திணைக்களம் போன்றவற்றிற்கு தெரிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |